**<u>இல்லப் பாதுகாப்புத் திட்ட (HPS) உறுப்பினர்களுக்கு மசேநி கழகம் உபரித் தொகையை விநியோகிப்பதுடன் HPS பிரிமியம் தொகையையும் குறைக்கிறது</u>**

1 1 ஜூலை 2006 முதல் மசேநி கழகம் பின்வருனவற்றைச் செய்யும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக்கொள்கிறது:

(அ) HPS உபரித் தொகையை உறுப்பினர்களுக்கு விநியோகித்தல், மற்றும்

(ஆ) அதன் HPS ஆண்டு பிரிமியத் தொகை விகிதங்களைக் குறைத்தல்.

<u>HPS உபரித் தொகையை விநியோகித்தக்</u>

2 சிறந்த மூதலீடுகளால் கிடைத்த லாபங்கள், எதிர்பார்த்ததைவிடக் குறைவான கோரிக்கைத் தொகை விநியோகம் மற்றும் குறைந்த இயக்கச் செலவினங்கள் ஆகியவற்றின் காரணமாக HPS திட்டத்தில் கழகம் உபரித் தொகையைப் பெற்றுள்ளது. ஜூலை 2006ல் கழகம், $480 மில்லியன் உபரித் தொகையை HPS உறுப்பினர்களுக்கு விநியோகிக்க உள்ளது. இதற்கு முன்னர் 1986, 1989 மற்றும் 1997 ஆண்டுகளில் மூன்று முறை இத்தகைய விநியோகங்களைச் செய்த கழகம் இப்போது நான்காம் முறையாக உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்கிறது.

3 ஒட்டு மொத்தமாக, சுமார் 950,000 HPS உறுப்பினர்கள் இந்த விநியோகம் மூலம் நன்மையடைவர். அவர்கள் தங்களின் மசேநி சாதாரணக் கணக்கில் வரவு செய்ப்பட்டுத் தங்களின் கழிவுகளைப் பெறுவர். இந்த எண்ணிக்கையில், தற்போதுள்ள 325,000 ஒற்றை பிரிமிய (SP) உறுப்பினர்களும் இத்திட்டத்தின் கீழ் 1997ம் ஆண்டு (அதாவது முந்திய விநியோகத்திற்குப்பிறகு) காப்புறுதிபெற்ற 285,000 முந்திய SP உறுப்பினர்களும், தற்போதுள்ள 340,000 ஆண்டுப் பிரிமியம் செலுத்தும் (AP) உறுப்பினர்களும் அடங்குவர். தங்களின் முழுப் பிரிமியம் தொகை அனைத்தையும் செலுத்துவிட்டதால் SP உறுப்பினர்கள் விநியோகத் தொகையிலிருந்து பெரும் பங்கைப் பெறுவர். இவர்கள் காப்புறுதி நிதியில் பெரும் பகுதியைச் செலுத்தியவர்கள் என்பதுடன் உபரித் தொகையின் பெரும் பகுதிக்கும் பங்களித்தவர்களும் ஆவார்கள்.

4 தகுதி பெறும் எல்லா உறுப்பினர்களுக்கும் கழகம் ஜூன் 2006 இறுதி வாரத்தில் கடிதம் வழி கழிவுகள் குறித்துத் தெரிவிக்கும். 1 ஜூலை 2006ல் கழிவுத் தொகை உறுப்பினர்களின் சாதாரணக் கணக்கில் வரவு வைக்கப்படுவதுடன் அது அவர்களின் சாதாரணக்கணக்கு சேமிப்புத் தொகையில் ஓர் அம்சமாக இருக்கும். வழக்கமான மசேநி விதிமுறைகளுக்கு உட்பட்டு அவை பயன்படுத்தப்படலாம் அல்லது மீட்டுக்கொள்ளப்படலாம்.

HPS பிரிமியம் தொகைக் குறைப்பு

5 எல்லா HPS உறுப்பினர்களுக்கும், கழகம் தனது HPS ஆண்டுப் பிரிமியம் விகிதங்களை 1 ஜூலை 2006 முதல் குறைக்க உள்ளது. முதிய வயதுப் பிரிவினர் பெருமளவிலான விழுக்காட்டுக் குறைப்பை அனுபவிப்பர். HPS திட்டத்தில் 1 ஜூலை 2006 அல்லது அதற்குப் பிறகு சேரும் உறுப்பினர்கள், புதிய விகிதங்களை அனுபவிப்பர். தற்போதுள்ள HPS உறுப்பினர்கள் தங்களின் ஆண்டுக் காப்புறுதிகளைப் புதுப்பிக்கும்போது குறைந்த பிரிமியம் தொகையைச் செலுத்துவர்.

6 அண்மைய காலத்தில் ஏற்பட்ட அடைமான வட்டி விகிதக்குறைப்பு, எதிர்பார்த்ததைவிட குறைந்த அளவில் கொடுக்கப்பட்ட கோரிக்கைத் தொகை மற்றும் குறைந்த இயக்கச் செலவினங்கள் ஆகியவை காரணமாக கழகம் HPS பிரிமியம் தொகையைக் குறைக்க முடிந்துள்ளது. அதோடு, கழகம் ஆண்டுப் பிரிமிய விகிதத்தைக் குறைத்து, செலுத்தவேண்டிய மொத்த பிரிமியம் தொகையை நீண்ட காலத் தவணைமுறையில் வசூலிக்கிறது.

7 பிரிமியம் விகிதங்களின் குறைப்புடன், பெரும்பாலான HPS உறுப்பினர்கள் தங்களின் காப்புறுதிக் காலத்திற்குச் செலுத்தும் மொத்த பிரிமியத் தொகையை 10%க்கும் 35%க்கும் இடைப்பட்டு குறைவாகச் செலுத்துவர். எடுத்துக்காட்டாக, ஒரு 35 வயது உறுப்பினர், தற்போது 20 ஆண்டு கால வங்கிக் கடன் தொகையான $200,000கு 16 ஆண்டுகாலத்திற்கு ஆண்டுதோறும் $282.00 செலுத்துகிறார். இந்த மாற்றங்களால் அதே 20 ஆண்டுகால கடனுக்கு 18 ஆண்டு காலத்திற்கு அவர் ஆண்டுக்கு $216.00 மட்டுமே செலுத்துவார். ஆகவே, காப்புறுதி பெறும் முழுக் காலத்திற்கும், ஆண்டுப் பிரிமியம் தொகையில் 23% குறைப்பையும் ஒட்டுமொத்த பிரிமியம் தொகையில் 14% விழுக்காட்டையும் இந்த உறுப்பினர் அனுபவிப்பார்.

HPS பற்றி

8 தங்களின் வீவக வீட்டுக் கடன்களைச் செலுத்த தங்களின் மசேநி சேமிப்புகளைப் பயன்படுத்தும் உறுப்பினர்களுக்காகக் கட்டாய அடைமான-குறைப்பு காப்புறுத்தித் திட்டம்தான் HPS திட்டம். உறுப்பினர்கள் இறந்தால் அல்லது நிரந்தரமான செயல்இழப்பு அவர்களுக்கு ஏற்பட்டால், அவர்களின் வீட்டை இழப்பதற்கு எதிராக உறுப்பினர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் இத்திட்டம் நிதிப் பாதுகாப்பை வழங்குகிறது. காப்புறுதி பிரிமியம் தொகையைச் செலுத்த உறுப்பினர்கள் தங்களின் மசேநி சேமிப்புகளைப் பயன்படுத்தலாம். வீட்டுக் கடன் காலம் வரை அல்லது காப்புறுதி பெறும் அதிகபட்ச வயது 65 வரை, எது முன்னர் வருகிறதோ, அது வரை அவர்கள் காப்புறுதி பெறுவார்கள்.

9 2001க்கு முன்னர், HPS பிரிமியம் தொகை முழுமையாகச் செலுத்தப்பட்டது. இவை ஒற்றை பிரிமியத் தொகை (SP) காப்புறுதிகள். SP காப்புறுதித் திட்டத்தைக் கழகம் நிறுத்திவிட்டு 2001ம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் செலுத்தும் பிரிமியம் (AP) காப்புறுதித் திட்டத்தை அறிமுகம் செய்தது. 325,000 SP உறுப்பினர்களும் 340,000 AP உறுப்பினர்களும் உள்ளனர்.

<u>பொது விசாரிப்புகள்</u>

10 விசாரிப்புகள் செய்ய விரும்பும் உறுப்பினர்கள் மசேநி விசாரிப்பு நிலையத்தை 1800-273-8-477 (1800-CPF-8HPS) எனும் தொலைபேசி எண்ணில் அழைக்கலாம் அல்லது தங்களின் மின்னஞ்சல்களை Insurance@cpf.gov.sg எனும் முகவரிக்கு அனுப்பலாம்.

மாதிரிக் கடிதம்

| |
|---|
| **இல்லப் பாதுகாப்புத் திட்டத்திற்கான (HPS) கழிவு** |
| HPS உபரிகளை HPS உறுப்பினர்களுக்கு கழிவுகளாக ஜூலை 2006ல் கழகம் விநியோகிக்கும் என்று கழகம் அண்மையில் அறிவித்தது உங்களுக்குத் தெரிந்திருக்கக் கூடும். கழகம் இவ்வாறு செய்ய முடிந்ததற்கு, முதலீடுகளிலிருந்து நல்ல லாபங்கள் கிடைத்ததும், எதிர்பார்த்ததைவிட கோரிக்கைகள் வழி உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்ட தொகை குறைந்ததும், மேலும் அதன் குறைந்த இயக்கச் செலவும் காரணங்களாகும்.<br><br>நீங்கள் கழிவுத் தொகையாக $XXXX.XX பெறுவீர்கள் என்பதை நாங்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இந்தத் தொகை உங்களின்/உங்கள் வாழ்க்கைத்துணையின் மசேநி சாதாரணக் கணக்கில் * வரவு வைக்கப்படும். 1 ஜூலை 2006ல் இத்தொகை உங்களின்/உங்கள் வாழ்க்கைத் துணையின் சாதாரணக் கணக்குச் சேமிப்பில் ஒரு பகுதியாக இருக்கும் என்பதுடன், வீடு வாங்குதல் மற்றும் முதலீடு செய்தல் ஆகிய மசேநி-யால் அங்கிகரீக்கப்பட்ட திட்டங்களில் ஏதேனும் ஒன்றுக்குப் பயன்படுத்தலாம்.<br><br>* HPS பிரிமியம் தொகை உங்கள் வாழ்க்கைத் துணையின் மசேநி சாதாரணக் கணக்கிலிருந்து செலுத்தப்பட்டிருந்தால். |
| **இல்லப் பாதுகாப்புத் திட்டத்திற்கான (HPS)<br>கழிவும் பிரிமியத் தொகை மாற்றமும்<br>ஆண்டுப் பிரிமியம் செலுத்தும் உறுப்பினர்களுக்கு** |
| HPS உபரிகளை HPS உறுப்பினர்களுக்கு கழிவுகளாக ஜூலை 2006ல் கழகம் விநியோகிக்கும் என்று கழகம் அண்மையில் அறிவித்தது உங்களுக்குத் தெரிந்திருக்கக் கூடும். கழகம் இவ்வாறு செய்ய முடிந்ததற்கு, முதலீடுகளிலிருந்து நல்ல லாபங்கள் கிடைத்ததும், எதிர்பார்த்ததைவிட கோரிக்கைகள் வழி உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்ட தொகை குறைந்ததும், மேலும் அதன் குறைந்த இயக்கச் செலவும் காரணங்களாகும்.<br><br>நீங்கள் கழிவுத் தொகையாக $XXXX.XX பெறுவீர்கள் என்பதை நாங்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இந்தத் தொகை உங்களின்/உங்கள் வாழ்க்கைத்துணையின் மசேநி சாதாரணக் கணக்கில் * வரவு வைக்கப்படும். 1 ஜூலை 2006ல் இத்தொகை உங்களின்/உங்கள் வாழ்க்கைத் துணையின் சாதாரணக் கணக்குச் சேமிப்பில் ஒரு பகுதியாக இருக்கும் என்பதுடன், வீடு வாங்குதல் மற்றும் முதலீடு செய்தல் ஆகிய மசேநி-யால் அங்கிகரீக்கப்பட்ட திட்டங்களில் ஏதேனும் ஒன்றுக்குப் பயன்படுத்தலாம்.<br><br>தற்போதைய பிரிமியம் தொகையான $XXXX.XX –டன் ஒப்பிடுகையில், உங்களின் HPS திட்டத்தை மாதம் YYYY நீங்கள் புதுப்பிக்கும்போது நீங்கள் ஆண்டுப் பிரிமியம் தொகையாக $XXX.XX -யை குறைந்த அளவில் செலுத்துவீர்கள். உங்களுக்குள்ள காப்புறுத்திக்கான மீதமுள்ள பிரிமியக் கட்டணம் இப்போது XX ஆண்டுகளுக்கு** மாற்றியமைக்கப்படுகிறது. உங்களின் காப்புறுதியை மாதம் YYYY புதுப்பிக்கும்போது உங்களின் புதிய HPS சான்றிதழை உங்களுக்கு அனுப்பி வைப்போம். |

* HPS பிரிமியம் தொகை உங்கள் வாழ்க்கைத் துணையின் மசேநி சாதாரணக் கணக்கிலிருந்து செலுத்தப்பட்டிருந்தால்.

** விரிவுபடுத்தப்பட்ட பிரிமியம் தொகை செலுத்தும் விதிமுறை (எடுத்துக்காட்டாக, 10 ஆண்டுக் கடனுக்கு 1 ஆண்டு நீடிப்பு 30 ஆண்டு கடனுக்கு 3 ஆண்டு நீடிப்பு) ஆண்டு பிரிமியம் விகிதத்தைக் கழகம் மேலும் குறைக்க வகை செய்கிறது. அதன் மூலம் உறுப்பினர்கள் தங்களின் HPS பிரிமியம் தொகையைச் செலுத்துவது மேலும் கூடுதல் கட்டுபடியாகிறது. கொடுக்கப்படும் கழிவு மற்றும் பிரிமியம் தொகை விகிதக் குறைப்பு ஆகியவற்றைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு பார்த்தால், காப்புறுதி வழங்கும் காலத்தில் செலுத்தப்படும் மொத்த பிரிமியம் தொகையில் பெரும்பாலான உறுப்பினர்கள் 10%க்கும் 35%க்கும் இடைப்பட்ட குறைப்பை அனுபவிப்பார்கள்.